உ

சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை: சதம் 20

ஆரம்பம்: விரோதி ஸு (1889) ஆவணிமீ 28-ம் உ அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

பு - அசு | ........ ஆனந்த ஸு சித்திரைமீ கடு-உ வெள்ளிக்கிழமை (26 - 4 - 1974) | இல : ௩

# சிவன் அருள் பெற்று உய்வோம்

## அப்பர் சுவாமிகள் காட்டும் நெறி

"உலகுய்யத் திருவவதாரஞ் செய்த திருநாவுக்கரசு நாயனுர் தமது தாய் தந்தையர் மறைந்தபின் தமக்கையார் திலகவதியாருடைய ஆதரவில் வாழ்ந்தார். சகல கலைகளையும் கற்றுணர்ந்தாராயினும் நம்பன் திருவருள் கைகூடாமையினுல் கொல்லாமையை அனுட்டிக்கிறோமென்று வெளியில் கூறிக்கொண்டு கொலையை மறைவாகப் புரியும் சமண சமயத்தைச் சார்ந்தார். தருமசேனர் என்ற நாமத்துடன் அவர்களுடைய மதகுருவாக வாழ்ந்தார். அவருடைய போக்கைக் கண்ணுற்ற தமக்கையார் திருவதிகை வீரட்டானேசுரரைத் தமது தம்பியாரைச் சைவ சமயத்துக்கு மீட்டுத் தர வேண்டுமென வேண்டினார், திருவருளினுல் அவருக்குச் சூலைநோயுண்டானது, சமணர்களுடைய மருந்து மந்திரம் தந்திரம் ஒன்றினுலும் அவருடைய சூலை நோய் மாறவில்லை. திருவருள் கைகூட மருணீக்கியார் தமது தமக்கையாரை வந்தடைந்தார். அம்மையார் அவரை ஸ்நானஞ் செய்யச் செய்து ஸ்ரீ பஞ்சாட்சரத்தை ஓதித் திருவெண்ணீற்றை அணியச் செய்தார்.

திருவாளன் றிருநீறு
 திலகவதியா ரளிப்பப்
பெருவாழ்வு வந்ததெனப்
 பெருந்தகையார் பணிந்தேற்றல்
குருவார வணிந்துதமக்
 குறுதவிடத் துய்யுநெறி
தருவாராய்த் தமமுன்பு
 வந்தார் பின்னும் வந்தார்.

தம்பியாரை அழைத்துக்கொண்டு திருமெழுக்குந் தோண்டியுங் கொண்டாறணிந்தார் கோயிலினுள் வந்தடைந்தார். தம்பிரான் திருவருளால் தமிழ் மாலைகள் சாத்து முணர்வு வரப் பெருமானைத் தொழுது 'கூற்றாயினவாறு' என்ற தேவாரத் திருப்பதிகத்தைப் பாடினார். சூலைநோய் நீங்கிற்று. பின்பு திருநாவுக்கரசு என்ற திருநாமம் அவருக்கு இறைவனால் சூட்டப்பட்டது.

பல்லவராசனால் நேர்ந்த நீற்றறை, விடம், வேழம் முதலிய துன்பங்களெல்லாம்

(வளர்ச்சி 4 ஆம் பக்கம்)

## முருகமூர்த்திகோவில் வருடாந்த மகோற்சவம்

மாதகல் நுணசை முருகமூர்த்திகோயில் மகோற்சவம் ஆனந்த வருடம் சித்திரை மாதம் 12ம் நாள் (25-5-74) மகோற்சவம் ஆரம்பமானது 26-4-74 தொடக்கம் 4-5-74 வரை திருமுருகாற்றுப்படைச் சொற்பொழிவுகள் அறிஞர்களால் நிகழ்த்தப்படும். திருமுருகாற்றுப்படையை மனனஞ் செய்யும் மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும்.

## அரியாலை ஸ்ரீ ஞானவைரவர் கோவில் வருடாந்த அலங்கார உற்சவம்

மேற்படி ஆலயத்தின் அலங்கார உற்சவம் 25-4-74ல் ஆரம்பமாயது. 2-5-74 வியாழக்கிழமை பகல் வேட்டை அபிஷேகாராதனைகளும் சங்காபிஷேகமும் இரவு சுவாமி ஊர் உலா வரும் நிகழ்ச்சியுமிடம் பெறும். திருவிழாக்கள் யோக கட்டுப்பாட்டுக்கமையப் பூர்த்தியாகும்.

## திருநெறிய தெய்வீக மகாநாடும் ஞானசம்பந்தர் மகோற்சவமும்

நல்லை. ஞானசம்பந்தர் ஆதீனத்தில் திருஞானசம்பந்தர் மகோற்சவமும் திருநெறித் தெய்வீக மகாநாடும் (நாளை முதல்) மூன்று தினங்கள் தொடர்ந்து (27, 28, 29-4-74 சனி, ஞாயிறு, திங்கள்) சிறப்பாக நிறைவேறவுள்ளது. முதல்நாள் விழாவுக்கு ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகளும் இரண்டாம் நாள் விழாவுக்கு சைவபரிபாலனசபைத் தலைவர் திரு. நம. சிவப்பிரகாசம் அவர்களும் மூன்றாவது நாள் விழாவுக்கு யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு. தி. முருகேசம்பிள்ளை அவர்களும் தலைமை வகிக்க வருகின்றனர்.

27-ம் திகதி மாலை 5 மணிக்கு திருமுலைப்பால உற்சவமும் பொற்றாள உற்சவமும் 6 மணி திருவீதிஉலா (சிறந்த மங்களஇசையுடன்) 7மணி பலபேறிஞர்களின் ஆய்வுரைகள் இரவு 8 மணிமுதல் திருமுறை இசையரங்கு நிகழும்

28-4-74 ஞாயிறு காலை 9மணி சைவ சித்தாந்த திருநெறிய தமிழ் வழிபாட்டுப் பயிற்சி நெறி. நடத்துபவர் ஆதீன மஹா வித்துவான் சித்தாந்த கலாநிதி திரு க. கணபதிப்பிள்ளை B. A. அவர்கள

காலை 11-30 மணி அஷ்டோத்திர சதசங்காபிஷேகம நண்பகல் 12 மணி பூஜை ஆதீன தொண்டர், பணியாளர் மாணவர்கட்கு மாஹேஸ்வர பூஜை மாலை 5 மணி மறைக்கதவம் திறக்கவும் அடைக்கவும் பாடல் உற்சவம். மாலை 6 மணி திருவீதிஉலா. 7மணிக்குச்சிறப்புச் சொற்பொழிவு இரவு 8 மணி திருமுறை இசையரங்கு

29-4-74 திங்கள் மாலை 5மணி திருக்கல்யாணம் 6 மணி சிவஜோதியிற் கலத்தல் 6-30 மணி சிறப்புச் சொற்பொழிவு 7-30 மணி திருமுறை இசையரங்கு இரவு 8-30 மணி ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள் ஆசியுரை 9 மணிக்கு நன்றியுரை

## கதிரேசன் வித்தியாலயம் காணும்

# பொன் விழா

சைவமும், தமிழும் தழைத்தோங்கக் கடந்த ஐம்பது ஆண்டுகளாக மலையகத்தில் அரும் பணியாற்றி வரும் நாவலப்பிட்டி கதிரேசன் வித்தியாலயப் பொன் விழா இம் மாதம் 29- ஆம் தேதி கொண்டாடப் பெற இருக்கிறது.

"ஆத்மஜோதி" சமய சஞ்சிகையின் ஆசிரியரும், வித்தியாலய அதிபருமான திரு. நா. முத்தையா தலைமையிலான பெற்றோர் - ஆசிரியர் சங்க உறுப்பினர்கள் இவ் விழாவிற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

மலையகத்தில் முதன் முதலாகப் பொன் விழாக் கொண்டாடும் இத்தமிழ்க் கல்லூரியின் சைவத் தமிழ்ச் சேவைகளைப் பாராட்டி பல பிரமுகர்கள் இந்தியா - மலேசியா போன்ற நாடுகளிலிருந்து வாழ்த்துரைகள் அனுப்பியுள்ளனர்

இவ்விழாவை முன்னிட்டு பிரஸ்தாப வித்தியாலயத்தில் கண்காட்சி ஒன்றும் கலைவிழா நிகழ்ச்சிகளும் ஏற்பாடாகியுள்ளன.

மூவர்ண முகப்பு அட்டையுடன் பொன்விழா விசேடமலர் ஒன்றும் வெளியிடப் பட்டிருக்கிறது.

# மலையகத்தில் ஒரு கலைக்கோயில்

நாவலப்பிட்டிக் கதிரேசன் வித்தியாலயத்திறப்பு பொன விழா எடுக்கும் இந்நன்னாளிலே உங்களை 50 ஆண்டுகள் முன்னோக்கி அழைத்துச் செல்ல விரும்புகின்றேன். அந்தக்காலத்திலே நாவலப்பிட்டி என்றால் ஒரு புனிதத் நிலையப் பட்டினம் என்பதுதான் பலருடைய உள்ளத்தில் இருந்த கருத்தாகும்.

1918ம் ஆண்டு நத்தார் விடுமுறையின் போது கீரமலையில் 3 தினங்களுக்குச் சைவமகாநாடு ஒன்றும் நடைபெற்றது அதன் பிரதிபலிப்பாக நாடெங்கும் இந்து வாலிபசங்கங்கள் தோன்றின. அந்த உற்சாகத்தில 1919-ம் ஆண்டு வருடப்பிறப்பிலன்று நாவலப்பிட்டி இந்துவாலிப சங்கம் தோன்றியது அச்சங்கத்திற்கு முதல தலைவராக, அக்காலத்துப் பொதுமக்களால் 'திருமதுரை' என்று அன்புடன அழைக்கப்பட்டவரும் புலவெிரத நிலைய அதிபருமாகிய கருமுசி. ஞானசம்பந்தர் அவர்கள் தெரிவு செய்யப்பட்டார்.

சைவக் குழந்தைகளுக்குச் சைவப் பாடசாலையும் சைவசமய அறிவும் அவசியம் என்பதைப் பலர் உணர்ந்தனர். அத்தகையோரின் உணர்ச்சி வெளிப்பாடாக அமைந்ததே 1924ம் ஆண்டு தோன்றிய கதிரேசன் தமிழ் வித்தியாசாலையாகும்.

இதற்கு வித்திட்டவர்களின் பெயர்களை இத்தருணத்திலே நினைவு கூரவேண்டியது எமது முக்கிய நன்றிக்கடனாகும். திருவாளர்கள் கருமுசி ஞானசம்பந்தர் சி. ந, சி. இராமன் செட்டியார் ந, சி. சி, முத்தையாச் செட்டியார் எம. சந்தனம, சி. கனகசபை, டி. ஏ. டி. பெரியசாமிப்பிள்ளை. சி. ந. சி இலட்சுமணன் செட்டியார், பெ கோவிந்தசாமிப்பிள்ளை, வீ. எம. பெரியகறுப்பன், ஜே. எம. பொன்னையா, டி. சுவதுருநாதர், சீ வேலாயுதம, ச. சம்பந்தர் ஆகியோராவர், வித்தியாலயத்தின் முதல முகாமையாளராக இருக்கும் பேறு திரு. ச. சம்பந்தர் அவர்களுக்குக் கிடைத்தது அவர் இன்றும் எம் மத்தியிலே யாழ்ப்பாணம் கல்வியங்காட்டிலே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்,

திரு. நா. முத்தையா

## தமிழகம் அழைப்பு

நல்லை. ஞானசம்பந்தர் ஆதீன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் 1-5-74ல் தமிழக அழைப்பில்செல்கின்றார்.

மதுரை ஸ்ரீ மீனாட்சியம்பாள் கோயில் மகா கும்பாபிடேக விழாவிலும், சென்னை தாம்பரம் இராமநாதபுரம் ஆதிய இடங்களிலும் தம்பிரான் சுவாமிகளின் சங்கீத கதாப்பிரசங்க நிகழ்ச்சிகளிடம்பெற வுள்ளன. ந. நி.

கட்டிடத் திறப்பு விழாவிற்கு சேர், பொன், இராமநாதன் அவர்கள் அழைக்கப் பெற்றிருந்தார்கள். அரசாங்கசபையின் முக்கிய அலுவலகள் காரணமாக அவர் வரமுடியாமல் போகவே அக்காலத்தில் இந்திய அரசாங்கப் பிரதிநிதியாகக் கடமையாற்றிய திரு ஆர், இரங்கநாதன I, C, S, அவர்கள சமுகம் கொடுத்துப் பெருமனதோடு திறப்பு விழாவைபத்திலும கலந்துகொண்டார்கள் அக்காலத்தில் பாடசாலைக்குப் பிள்ளைகளைத் தேடிப் பிடிப்பது மிகக்

(வளர்ச்சி 4-ஆம் பக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

கேணியடி தின்னவேலி திலையம்பலம் கார்த்திகேசு கைம்பெண் சிவபாக்கியம் வழக்காளி

வழ. இல. M B 12099. எதிராக

29, வைமன் ரோட்டு, நல்லூர், யாழ்ப்பாணம். 1 இளையவி சிவனடியான் 2, சிவனடியான் மகாலிங்கம் எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B. 12099 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1974 ம் ஆண்டு வைகாசி மாதம் 23ம் திகதி (23-5-74) வியாழக்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 1595/- இன்னும் ரூபா 1000/-த்துக்கு 19-10-70 தொடக்கம் 28-5-71 வரைக்கும் 12% வட்டியும் அதன் மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 316/05

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்'' அத்திக்குளத்திலடி அத்திப்புலம் ஆவரன்பளகை அத்திக்குளத்தடி'' பர நில. இலா 2-0 இதில் வடக்கால பிரிவிடப்பட்ட ப நி இலா 1-0 வண்ணப்பண்ணை வடகிழக்கு வண்ணர்பண்ணை கோயிற்பற்று இச்சொல்லப்பட்ட பர-நில இலா 1-0 பயிர்வகைகளுமதைச் சேர்ந்தவைகளும் கிழக் கெல்லைக்காணியில் கிழக்கோரமாக இருக்கும் கிணற்றில் பங்கும் கிழக்கெல்லை காணியிலிருந்து அக்கிணறுக்குச் செல்லும் ஒரு குளி விசாலமுள்ள நடைபாதையில் வழிவாய்க்காலுருத்தும் இதற்கெல்லை கிழக்கு நாகன் வேலனுககுரியவாதனம் வடக்கு ராசையா பெண் பாக்கியத்துக்குரிய வாதனம் யேற்கு பாக்கியநாதன் அருளையாவுக் குரிய வாதனம் தெற்கு சின்னவன் மாரிக்கண்டுவுக்குரிய மிகுதியா தனமும் மூன்றடியகலமுள்ள கையொழுங்கையும் இதடங்கலும். பொது ஒழுங்கையில் பங்கும்.

அ. போ. எதிர்மனசிங்கி
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்

14 டேவிட்ரேட்,
யாழ்ப்பாணம். 10-4-74

16 26-4

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ.இல. MB10642. யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

இலக்கம் 39 பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை பொன்னம்பலம் - வாதி

எதிராக

புக்கை தின்னிப்பிள்ளையார் கோவிலடி ஆனைக்கோட்டையைச் சேர்ந்த கதிரவேலு கணபதிப்பிள்ளை பிரதிவாதி

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தின் M B 10642 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1974 ம் ஆண்டு வைகாசி மாதம் 16ம் திகதி (16—5—74) வியாழக்கிழமை முற்பகல் 10-30மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை ரூபா 10,042/-ம் 25-2-69 தொடக்கம் 12-11-69 வரைக்கும் ரூபா 6250/- க்கு 12% வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் 5%வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 565-64 சதமுமாகும்.

### ஆதன விபரம்

வடமாகணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் மேற்கு மானிப்பாய் கோவிற்பற்று ஆனைக்கோட்டையில் இருக்கும் ', நாலு வரக்காடு'' என அழைக்கப்படும் நிலப்பரப்பு உலாந்தாவின் அளவுப்படி 6 3/10 ஆகும் ஆனல் அக்காணி உறுதிப்படி 7 பரப்பு என உள்ளது இக்காணியுள வான்பயிர் செய்பயிர்களும் வீடும இக்காணிக்கூடாக தெற்கெல்லையோடு கணபதிப்பிள்ளையின் மனைவி செல்லாம்மாவின் ஆதனத்திற்குச் செல்லும் ஒழுங்கையும் உள்ளன.

எல்லை கிழக்கில வயித்திலிங்கம் குழந்தையின் ஆதனமும் எல்லைவடக்கில் கணபதிப்பிள்ளை செல்லையாவின் ஆதனமும எல்லை மேற்கில் மானிப்பாய் வீதியும் எல்லை தெற்கில் ஒழுங்கையும் உள்ளன. முழு ஆதனமும் இதில் அடங்கும்

'வடிவேல் உதயம்''
காங்கேசன்துறைவிதி,
கோண்டாவில்,
3-4-74

சி. ஆ. த. வடிவேலு, J. P.
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
ஏல விற்பனையாளரும்

18 26-4

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

உரும்பிராய்; யாழ்ப்பாணம்.

(1) கணபதிப்பிள்ளை இராசரத்தினமும்
(2) பெண் நாகரெத்தினமும் —வழக்காளிகள்

இல. M.B. 11960 எதிராக

நாயன்மார்காடு; யாழ்ப்பாணம்.

(1) சின்னத்தம்பி கந்தையாவும்
(2) பெண் யோகம்மாவும் —எதிராளிகள்

யாழப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11960ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகளை 1974 ம் ஆண்டு மே மீ 15ம் திகதி (15—5—74) புதனகிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 3045/-ம் 25-8-70 தொடக்கம் 31-1-71 வரைக்கும் ரூபாய் 1500/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 322 - 85

### ஆதன விபரம்

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நல்லூர் கோவிற்பற்று நல்லூர் இறை 'நாயன்மார்குளம் வயல்'' நி பர. (1) ஒன்று வீடும, கிணறும், குசினியும் இதற்கு எல்லை கிழக்கு கையொழுங்கை, வடக்கு அப்பாக்குட்டி முனியையாவுக் குரியவாதனம், மேற்கு வேலுப்பிள்ளை சதாசிவம் பெண் தங்கச்சியம்மாவுக்குரியவாதனம், தெற்கு சபாரத்தினம் பெண் கண்மணிக் குரியவாதனம். இதடங்கலும் தெற்கெல்லைக் காணிக்காரனுக் குரிய கிணற்றில் பங்கும் வழிவாயக்கால் உரித்தும் பிற நீங்கல் இல: D. 272/189

(2) ஷ நல்லூர் இறை ''நாயன்மார்குளம் வயல்'' ந. பர. (1) ஒன்று வீடும், வழி வாய்க்காலும் இதற்கு எல்லை: கிழக்கு கையொழுங்கை, வடக்கு சின்னத்தம்பி தம்பிப்பிள்ளைக் குரியவாதனம, மேற்கு சதாசிவம பெண் தங்கச்சியம்மாவுக்குரியவாதனம், தெற்கு வீரகத்தி வயிரமுத்துவுக்குரிய வாதனம். பதிவிலக்கம்: D. 198/153

46, 3-ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்,

இ. சு. தர்மரத்தினம்
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்

21, 26-4



உடுவில் அம்மன் கோவில் என வழங்கும்

# ஸ்ரீ மீனுக்ஷி சுந்தரேஸ்வரர் தேவஸ்தானம்

துவஜாரோகண மகோற்சவத்தை முன்னிட்டு நடைபெறும்

# திருமுறைப் பெருவிழா

## (26-4-74 முதல் 6-5-74 வரை)

"மேன்மைகோள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

சைவத் திருநெறிச் செல்வர்காள்!

சிவபூமியாகிய ஈழநாட்டின் சிரசென விளங்கும் யாழ்ப்பாண நகரின் வடபால் அமைந்த உடுவையம்பதியில் சகல ஆன்மாக்களும் வழிபாடு செய்து உய்யும் வண்ணம் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ மீனுஷி அம்பாளுக்கு நிகழும் ஆனந்த வருஷம் சித்திரை மாதம் 13-ஆம நாள் (26-4-74) வெள்ளிக்கிழமை தொடக்கம் சித்திரா பூரணை (6-5-74) திங்கட்கிழமைவரை மகோற்சவம்நிகழவிருக்கின்றது.

ஷ தினங்களில் சைவ சமயிகளுக்கென நாயன்மார்களாலும் பிற சைவப் பெரியார்களாலும அருளிச் செய்யப்பட்ட அரிய பெரிய பொக்கிஷங்களாக விளங்கும் பன்னிரு திருமுறைகளுக்குப் பெருவிழா எடுப்பதற்கு உலகநாயகியாகிய மீனுக்ஷி அம்பாள் திருவருள் பாலித்துள்ளாள்.

ஷ விழா இலங்கை மெய்கண்டார் ஆதின சமயப் பிரசார அமைப்பில் சைவமும் தமிழும் தழைத்தோங்க அரும் பாடுபடும் சைவ பரிபாலன சபை, வேதாகம சைவ சித்தாந்தசபை, சைவ அநுட்டான பாதுகாப்புச்சபை, பண்டிதர் வித்துவான் புலவர்மார் சபை, சைவ மகாசபை, இந்துதர்ம நெறிச் சபை போன்ற சபைகளின் ஆதரவுடன்,

இலங்கை ஸ்ரீ மெய்கண்டார் ஆதீன முதல்வர்

## ஸ்ரீமத். ஞானப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகள் அவர்களது

தலைமையில் ஷ தேவஸ்தான மண்டபத்தில் பன்னிரு திருமுறைகளைப்பற்றிய சொற்பொழிவுகள் (26-4-74) வெள்ளிக்கிழமை தொடக்கம் (6-5-74) திங்கட்கிழமைவரை நடாத்தப்பெறும்.

தொடக்கத் தினத்தன்று (26-4-74) வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு பன்னிரு திருமுறைகளும உடுவிலில் புதிதாக அமைக்கப்பட்ட நூல் நிலைய முன்றிலில் இருந்து **ஸ்ரீமத். ஞானப்பிரகாசத்தம்பிரான் சுவாமிகளால்** ஊர்வலமாக ஷ தேவஸ்தான மண்டபத்துக்கு மங்கல வாத்திய சகிதம் எடுத்துச் செல்லப்பெறும்.

சுன்னகம் பட்டினசபைத்தலைவரும், முன்னாள் செனட்டருமான

**திரு. பொ. நாகலிங்கம் அவர்கள்**

திருமுறை ஊர்வலத்தையும் விழாவையும் ஆரம்பித்து வைப்பார்கள்.

அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் மாலை 7 மணியிலிருந்து 9 மணிவரை தம்பிரான் சுவாமிகளின் அருளுரையுடன் அறிவிற் சிறந்த பெரியோர்களின் இன்னுரையும் இடையிடையே பண்ணிசையும் நடைபெறும்.

### நிகழ்ச்சிகள்

26-4-74 வரவேற்புரை: பண்டிதர் க. சிவசம்பு உடுவில்
1-ம் திருமுறை, சைவ பூஷணம் திரு. நம, சிவப்பிரகாசம் (சைவ பரிபாலன சபைத் தலைவர்)

27-4.74 2ம் திருமுறை பண்டிதர் முருகவேள் பாலசுந்தரம் (B, O. L.) (வைத்திய கலாநிதி)

28-4-74 3ம் திருமுறை பண்டிதர் சைவப் பிரசாரகர் வே. சங்கரப்பிள்ளை (இளைப்பாறிய தலைமை ஆசிரியர்,)

(வளர்ச்சி 4-ஆம் பக்கம்)

## கல்வி, கலை கலாசாரக் காப்புக் கழகம்

மேற்படி விழா 30-3-74 சனிக்கிழமை மாலை நல்லை ஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் சதாவதானம் கதிரவேற்பிள்ளை அரங்கில் நடைபெற்றது. கழகத் தலைவர் திரு. சி. நாகராசா தலைமை வகித்தனர்.

சதாவதானம் புலோலி நா. கதிரவேற்பிள்ளை அவர்களின் உருவ ஓவியம் (ஓவிய விற்பன்னர் மணியத்தால் எழுதப்பட்டது) ஸ்ரீ சண்முகநாத அச்சக அதிபர் திரு சி. சு. குமாரசுவாமி அவர்களால் திரைநீக்கம் செய்யப்பட்டது.

திரு. பெ. பொ சிவசேகரன் (திருகோணமலை) ஈழத்து இலக்கியங்களைப் பற்றிச் சொற்பொழிவாற்றினர். அடுத்து. திரு ஷண்முக. குமரேசன் 'கவிதையும் மக்களும்' என்னும் பொருள்பற்றி உரை நிகழ்த்தினர். செ. தமிழ்மணி பொன். கிருஷ்ண பிள்ளை, சதாவதானம் கதிரை வேற்பிள்ளை அவர்களைப் பற்றி பேசினர்.

அடுத்தாகத் திரு. க. சி. குலரத்தினம் தலைமையில் ''வாழ்க்கையை உள்ளபடி சித்தரிப்பவை முற்கால இலக்கியங்களா? தற்கால இலக்கியங்களா? என்ற தலைப்பில் ஒரு பட்டிமன்றம் நிகழ்ந்தது. இதிற் கலந்துகொண்டவர்கள்: திரு சி. குமாரசாமி, திரு த. தம்பையா, திரு. ஆசீர்வாதம், திரு சு. இராசநாயகம் ஆகியோர்.

யாழ்ப்பாணம் ஜயந்தி நர்த்தனாலய மாணவிகளின் பரத நாட்டிய நிகழ்ச்சியும் விழாவில் இடம்பெற்றது.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ இல: M B 10516

நீர்வேலி அச்செழு சுவாமிநாதன் கைம்பெண் தங்கரத்தினம்

எதிராக வழக்காளி

யாழ்ப்பாணம் வைமன் வீதி 1. சண்முககுருக்கள சோமசுந்தரசாமாவும் மனைவி 2. இராசராசேஸ்வரியும எதிராளிகள்

M.B. 10516ம் இலக்க வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ்க்காணும் ஆதனம் 1974ம் ஆண்டு மே (வைகாசி) மாதம் 23 ம் திகதி (23-6-74) வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம அவ்வாதனத்துள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை முதல் வட்டி ரூபா 7,175 மேலும் 5000/ ரூபாவுக்கு 4-1-69 தொடக்கம் 10-5-69 வரைக்கும் வருடமொன்றுக்கு 12% வீதவட்டியும அதன் பின் சோந்த முழுததொகைக்கும் இறுக்கும வரைககும் வருடமொனறுக்கு 5 % வீதவட்டியும் கோட்டுச்செலவு ரூபா 343-50 சதம் பவுண்டேச் மற்றும் விற்பனைக்குரியசலார்களும

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டமும் பகுதியும வண்ணர்பண்ணை தென்மேற்கிறை''பனறி கொட்டுவௌவு நிலப்பரப்பு 2, 1/8 வீடும் பயிர்களும் மற்றும் அதைச் சேர்ந்தவைகளும் இதற்கு எல்லை கிழக்கு ரோட் வடககு துவாதேசி மடத்துக்குரிய ஆதனம மேற்கு இராமுப்பிள்ளை சுப்பிரமணியத்தின் உரிமைக்காரர்களினதனம தெற்கு பன்றிக்கொட்டு பிள்ளையார் கோவிலாதனம் அதைச் சேந்தவைகளுடன் முழுவதும்

பதிவு D,124/153

வி. செ. குட்டிப்பிள்ளை
கொமிசனர் & விலை மதிப்பாளர்
"இராசகிரி''
643, காங்கேசன் துறைவீதி,
யாழ்ப்பாணம் 18-3-74

25 26-4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டு விற்பனவு

**விளம்பரம்**

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வழ, இல. M. B 10460

1. இராமநாதன் கணேசன் பருத்தித்துறை. — வழக்காளி

எதிராக

1. பொன்னம்பலம் தம்பையா
2. பெண் கனகம்மா இருவரும், காரைக்காடு, வைணவர் பண்ணை மேற்கு, யாழ்ப்பாணம் — எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் MB 10460ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1974ம் ஞூ வைகாசி மீ 30-ம் திகதி (30-5-74 வியாழக்கிழமை முற்பகல் 10 30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னலை பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபாய் 7544/-ம் 29—11—68 தொடக்கம் 9—6—71 வரைக்கும் ரூபாய் 5000/-க்கு 12வீத வட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை, 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 745-45 சதம் இதில செலவுக் கணக்கால் ரூபாய 147/- கழிக்கப்படும்.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடமேற்கு இறை 'களளியடி' ப நல. இலா. 5 குளிகள 4, 6/10ம் இதற்கு எல்லை கிழக்கும் வடக்கும் கையொழுங்கை, மேற்கு ஒழுங்கை, தெற்கு ஐபாதது சின்னராசாவின் ஆதனம, இதடங்கலும்.

**ப. நா தருமலிங்கம்**

கொமிஷனர் & விலைமதிப்பாளர்

167/1 கோவில் வீதி,

நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்

18-4-74 19 26-4

---

கோட்டு விற்பனவு

**விளம்பரம்**

யாழ்ப்பாணம் மாவட்டக் கோடு

இல. M B 12684

கந்தன் முத்தையா, தோப்புக்காடு, காரைநகர். — வழக்காளிகள்

எதிராக

நமசிவாயம் தர்மலிங்கம் 45/1, ஜேசேப் டயஸ் மாவத்தை, கொழும்பு 15 — எதிராளி

மேற்சொல்லிய வழக்கில் எனக்குக் கிடைத்த உத்தரவின்படி கீழ் விபரிக்கப்படும ஆதனம் 1974ம ஞூ ஆனி மாதம 14ம் திகதி (14-6-74) வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில அக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னல் விற்கப்படும

தீர்வைத் தொகை: முதலும் வட்டியும் 6708-35, மேலும் 5,000/- ரூபாவிற்கு 7-12-1971 — 12-9-72 பத்து வீதவட்டியும் கூட்டிக் கூடியதொகைக்கு 12-9-72 தொடக்கம் முழுப்பணம் இறுக்கும வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு 580-85 (ஏற்பட்ட செலவு 381-70 வெலியாததுச் செலவு 116-75 இனிமேலேறபடும் செலவு 82-40)

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் தீவுப் பகுதி காரைதீவுக கோவிற்பற்று காரைதீவு கிழக்கிறை 'தோப்பிற்காடு' பர. நி. லா, 5 விடுகளும வான் பயிர் செய்பயிர்களும் பனைகளும் எல்லை கிழக்கும் வடக்கும் ஒழுங்கை, மேற்கு காசிநாதர் துரைசாமியினுதனம, தெற்கு ஆண்டார் பெண சின்னுச்சியின தனம் இதடங்கலும்.

**தா, க. பொன்னுத்துரை J.P.**

கொமிஷ்னர் & விலைமதிப்பாளர்

'அகிலகம்'

28/1. யாழ் ரேட்,

யாழ்ப்பணம். 10-4-74

20 26-4

---

## COMMISSION SALE

## கோட்டுக் கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில், வழ. இல. 10632

கெருடாவில் சுப்பிரமணியம் அருள்லிங்கம் —வழக்காளி

எதிராக

காவெட்டி வடக்கு சிற்றம்பலம் சின்னத்தம்பி —எதிராளி

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படும் ஆதனத்தை 1974 ஆம் ஞூ வைகாசி மாதம் 15-ம் திகதி (15-5-74) புதனகிழமை முறபகல 10 மணிதொடக்கம் குறிதத ஆதனத்திடமாகவிருந்து என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி கட்டைவேலிக் கோவிற்பற்று கரவெட்டி குறுளிக்குறிச்சியிறை வாரியத்தனை நி பர. 8, 5/8 ஷை வீடு ½ ஷை நி. பர. 3 3/8 வாரியத்தனை கிழக்கு வாரியத்தனை ஆட்சியிலளந்துகண்ட நி. பா. 2 குளி 8 இவைகளில் வடக்குப் புறமாக முதல் மூன்று பிரிவுகளில 1/3 பங்கும், 4ம பிரிவில் 1/6 பங்கும் கூடிய நி பர 4 குளி 11, 1/3 இதுவும் இன்னும நாலு பிரிவுகளிலும் நடுப்பெற 1/3 பங்குக்கு நி பர. 5 குளி 2/3 இதுவும் ஒரே துண்டாயிருக்கிறது. இதற்கு ஆட்சப்படி நி. பர. 11 இதில் மேற்குப் புறமாக நி பர. 6 நீக்கி மிகுதிக்குரிய நி. பர. 5 எல்லை கிழக்கு கிட்டிணா பெண இலட்சுமிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், வடக்கு ஒழுங்கை, மேற்கு காலிங்கர் பெண சிவபாக்கியத்துக்குரிய ஆதனம், தெற்கு வீரகத்தியார் பொன்னையாவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இவ்வெல்லைக்குள்ளிருக்கும் கோயில், கொட்டில்கள் பிற நீங்கலாக. நிலம, பனைகள, வேம்புகள், கிணறு முழுவதும்.

துரட்சித்தொகை: ...

ரூபா 5000/-க்கு 20-9-69 தொடக்கம் 24-3-70 வரை ... 5865 00

12 வீத வட்டி ... 300 00

————

6165 00

ரூபா 6165/-க்கு 24-1-71 தொடக்கம் 6-3-71 வரை

5 வீத வட்டி ... 35 00

————

6200 00

ரூபா 1500/- எதிரி 6-3 71 கொடுத்தது ... 1500 00

————

4700 00

ரூபா 4700/-க்கு 6-3-71 தொடக்கம் 13-12-71 வரை

5 வீத வட்டி ... 188 00

————

முழுத்தொகை: ... 4888 00

ரூபா 4888/-க்கு 13-12-71 தொடககம 13-2-73 வரை

5 வீத வட்டி ... 280 00

————

முழுத்தொகை: ... 5168 00

ரூபா 1000/- எதிரி 3-2-73 கொடுததது ... 1000 00

————

முழுத தொகை: ... 4168 00

ரூபா 4168/-க்கு 13-.-73 தொடககம 27-3-73 வரை

5 வீத வட்டி ... 23 00

————

4191 00

ரூபா 500/- எதிரி 27-3-73 கொடுத்தது
ரூபா 500/- எதிரி 29-3-73 கொடுததது } ... 1000 00

————

முழுத்தொகை: ... 3191 00

ரூபா 3191/-க்கு 29-3-73 தொடக்கம 20-12-73 வரை

வட்டி 110 00

————

முழுத்தொகை: ... 3301 00

ரூபா 500/- எதிரி 20-12-73 கொடுத்தது ... 500 00

————

முழுத்தொகை: ... 2801 00

ரூபா 2801/-க்கு 20-12-73 தொடக்கம் 20-3-74 வரை

5 வீத வட்டி ... 35 00

————

முழுத்தொகை: ... 2836 00

கோட்டுச்செலவு: ... 272 00

————

முழுத்தொகை: ... 3108 00

————

ரூபா 3108/-க்கு 20-3-74 தொடக்கம் 29-5-74 வரை

5 வீத வட்டி

**R. S. இராமநாதன் J.P.**

"உமாபதி"

கொமிசனரும், விலமதிப்பாளரும்,

தும்பளை, நெல்லண்டை ரேட்,

ஏல விற்பனையாளரும்.

பருத்தித்துறை,

Commisioner of Sales, Auctioner & Valuer

23-4-74

22 26.-4

---

## அப்பர் சுவாமிகள் திருவுருவப் படம்

18 4-74ல் நடைபெற்ற திருநாவுக்கரசு நாயனர் குருபூசை விழாவில் யாழ்ப்பாணம் மில்க்வைற் சோப் தொழிலகத்தார் திருநாவுக்கரசு நாயனர் படத்தை வெளியிட்டுள்ளார்கள். பொதுமன்றங்கள், சங்கங்கள், பாடசாலைகள் ஆகியன ... தொடர்பு இலவசமாகப் பெற்றுக் கொண்டனர்.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

வழ, இல. M.B. 12914

வட்டுக்கோட்டை கிழக்கைச் சேர்ந்த 1- சின்னத்தம்பி ஆறுமுகம் கைம் பெண் 2, கமலம்மாவும் வட்டுக்கோட்டை மேற்கைச் சேர்ந்த 3. செல்லத்துரை பாலசுப்பிரமணியமும் —வாதிகள்

எதிராக

வட்டுக்கோட்டை மேற்கு நாச்சாண்டியைச் சேர்ந்த 1, உவில்லியம் யோசேப்பும் பெண் 2, செல்லம்மாவும். —பிரதிவாதிகள்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தின் M B 12914ம்இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணி 1974 ஆண்டு வைகாசி மாதம் 17ந் திகதி (17-5-74) வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத்தொகை**

மேற்குறித்த பிரதிவாதிகள் குறித்த 2ம் வாதிக்கு ரூபா 4012-50 சதமும் மேலும் ரூபா 2500க்கு வருடமொன்றுக்கு 12 வீதம் வழக்கு அனைத்த திகதியாகிய 1972ம் ஆண்டு தை மாதம் 10ந் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1972ம் ஆண்டு ஆனி மாதம 8ம திகதிவரையுமான வட்டியும் அதன் பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 319-05 சதம் (இதில்நடைபெற்ற செலவு ரூபா 217-10 நடைபெறவேண்டிய செலவு ரூபா 54-50 மேலதிகசமயாசமயச் செலவு 47-45) கொடுக்கப்படவேண்டியதாகும,

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் மேற்கு வட்டுக்கோட்டை கோவிற்பற்று வட்டுக்கோட்டை மேற்கு இறை கலசம்புடையும் நாச்சாண்டியும் பர நில இலா ஒன்றும் குழி எட்டும் கல வீடும் வான்பயிர் செய்பயிர்களும் இதற்கு எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு கனகசபை பெண் நல்லம்மாவிற்குரிய ஆதனம் மேறகு கணபதிப்பிள்ளை ஆறுமுகத்திற்கும் பெண் சந்தனிக்கும் உரியவாதனம் இந்தெல்லைப்படி இதனடங்கிலும் மேற்கெல்லையிலிருக்கும கிணற்றில் இதற்குரிய பங்கும் இன்னும் இதைச்சேர்ந்தவைகள் அனைத்தும்.

வடிவேல் உதயம்"

**சி. ஆ. த. வடிவேலு J. P.**

காங்கேசன்துறை வீதி,

கொமிஷனரும், விலைமதிப்பாளரும்

கோண்டாவில்

ஏலவிற்பனையாளரும்.

3-4-74.

17 264

---

## Commission Sale

## கோட்டுக்கொமிஷன் விற்பனவுவிளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் வழக்கு இல: 10587

கரவெட்டி மேற்கு காலஞ்சென்ற வல்லிபுரம் வேலாயுதம் பெண் புவனேஸ்வரியின ஆதனத்துக்கு அவ்வூர் வல்லிபுரம் வேலாயுதம் மரண சாதனத தத்துவகாரன என்ற வகையில் —வழக்காளி

எதிராக

கரவெட்டி மேற்கு ஆறுமுகம சுப்பிரமணியம் — எதிராளி

மேற்குறிதத இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால எனககுக கிடைத்த கொமிஷன அதிகாரப்படியும் இதன கீழ விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனங்கள் 1974ம ஆண்டு வைகாசி மாதம் 29-ந திகதி (29-5-74) புதன்கிழமை முற்பகல் 10-30 மணி தொடககம குறிதத ஆதனங்களிடமாகவிருந்து என்னல் பிரசித்த ஏலததில் விறகப்படும.

**ஆதனங்களின் விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி வறணிக் கோவிற்பற்று

(1) கரம்பைக் குறிச்சியிறை "தண்டிகைசாத்தி வயல்" நெற் பர. 10 எல்லை கிழக்கு சபாபதி வல்லிபுரததுக்கும் பங்காளருக்குமுரியவாதனம், வடக்கு: ஊமையர் சினனத்தம்பியின் உரிமைககாரருக்குமுரியவாதனம், மேற்கு: காசிநாதர் கந்தருக்குரியவாதனமும், கரம்பைக்குறிச்சி கிழககுக் கந்தசுவாமி கோயிலுக்குரியவாதனமும். தெறகு: சந்திரசேகரக் குருக்கள் பெண பனனீரமுலையாளின் உரிமைக்காரருக்குரியவாதனம இதடங்கலும்.

(2) ஷை இறை "தண்டிகைசாத்தி வயல்" நெ. பர. 9 எல்லை கிழக்கு: சபாபதி வல்லிபுரததுககும் பங்காளருக்குமுரியவாதனம்; வடக்கு: வேதநாயகக்குருககள் பெண் சினனப்பிள்ளைக்கும மறுபேருககுமுரியவாதனம, மேறகு வேதாருணியம் சந்திரசேகரசுவாமி கோயிலுககுரியவாதனம், தெற்கு: ஊமையர் சின்னத்தம்பியின உரிமைக்காரருக்குரியவாதனம் இதடங்கலும்.

(1) துரட்சித்தொகை:

(2) ரூபா 5000/-க்கு 7 வீத வட்டி ... ரூபா 3000 00

21-10-59லிருந்து 10-9-62 வரை

(3) ரூபா 3000/-க்கு 7 வீத வட்டி " 660 66

11-9- 2லிருந்து 21-7-70 வரை

(4) ரூபா 5643-15க்கு 5 வீத வட்டி " 1980 49

22-7-70லிருந்து 21-3-72 வரை " 470 24

————

முழுத்தொகை: ... ரூபா 6111 39

(5) 21-3-72ல் 3ம், 4ம காணிகள் விலைபட்ட விற்பனவிலிருந்து அறவிடப்பட்ட தொகைப் பணம்: ... ... ரூபா 3285 00

————

மிகுதித் தொகை வருமதி ... ரூபா 2826 39

(6) ரூபா 2826-39க்கு 5 வீத வட்டி

22-3-72லிருந்து 24-3-74 வரை " 282 50

(7) கோட்டுச் செலவு ... 309 99

————

24-3-74 வரையுமுள்ள வருமதியான முழுத்தொகை ரூபா 3418 88

————

ரூபா 3481-88க்கு 24-3-74 தொடக்கம் 29-5-74 வரைக்கும் 5 வீத வட்டி

**R. S. இராமநாதன் J. P.**

"உமாபதி"

கொம்மிசனரும், விலை மதிப்பாளரும்

நெல்லண்டை ரேட்டு,

ஏலவிற்பனையாளரும்.

தும்பளை, பருத்தித்துறை, 23-4-74

23, 26-4

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம் வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

ஆனந்த ஞூ சித்திரைமீ கஙு-உ வெள்ளிக்கிழமை [1974]

## புகழீட்டும் வழி

புகழைப்பெற விரும்பி ஒருவன் தன்னைப் புகழுடையான் என்று கருதுதல் குற்றமாகும். அங்ஙனங் கருதுதலோடு ஒருவன் தன்னுடைய புகழை எடுத்து இயம்புதலும் குற்றமாகும். அது எதற்கு சமமெனின் ஒருவிளக்கை நீர் சொரிந்து ஏற்றத் துணிவதையொக்கும். நீரினல் விளக்கை ஏற்ற முடியாது, அதுபோல தன் புகழைத் தானே பறைசாற்றுதலால் புகழுண்டாகாது. ஒருவன் தனது குறைகளைச் சிந்திக்கவேண்டும். இன்ன இன்ன குறைகள் தன்னிடத்திலுண்டென பிறருக்கெடுத்துரைத்த லினல் அவனுடைய குறைகள் நீங்கும். புகழுண்டாகும்.

தன்னை வியப்பிப்பான் தற்புகழ்த றீச்சுடர்
நன்னீர் சொரிந்து வளர்த்தற்றற் றன்னை
வியவாமை யன்றே வியப்பாவ தின்பம்
நயவாமை யன்றே நலம்.

பிறராலே பெரும்மதிப்பையடைய விரும்புகின்றவன் பிறருடைய சீரையெல்லாம் எடுத்துக் கூறுதல் வேண்டும். பிறருடைய சிறுமைகளை எடுத்துப் பலருக்கும் கூறுதல் கூடாது.

பெரியோர்கள் இவ்வறநெறியில் நின்று ஒழுகுகின்றமையால் அவர்களுக்குப் புகழுண்டாகின்றது. இந்தப் பண்புகளுக்கெல்லாம் எடுத்துக் காட்டாக வாழ்ந்தவர் மகாத்மா காந்தியடிகள். அவருடைய சத்தியசோதனை என்னும் நூலைப் ஒருவன் படித்தால் அவர் தனது வாழ்க்கையில் இழைத்த குற்றங்களையெல்லாம் மறையாமல் வெளியிட்டிருக்கின்றனர். அவர் தன்னை உலகத்தவர் புகழவேண்டுமெனக் கருதி வாழவில்லை. புகழை அவர் வேண்டவில்லை. புகழ் அவரைத் தேடிச் சென்றது.

மக்கள் இக்கருத்துக்களை மனத்தில் பதித்துக் கொண்டு புகழை விரும்பாது கடமையைப் புரியப் புகழ் அவர்களைச் சென்றடையும்.

## சிவன் அருள்

(1-ஆம பக்கத்தின் வளர்ச்சி)

நீங்கின அப்பூதியடிகள் நாயனருடைய மகன் அரவந் தீண்டி உயிர் நீத்தபொழுது அவனை உயிர்ப் பித்தார் கைலைக் காட்சியைத் திருவையாற்றிற்கண்டார். திருஞான சம்பந்தமூர்த்தி நாயனருடைய உறவைப் பெற்று அவரால் அப்பரென அழைக்கப்பெற்றுர். ஈற்றில் திருப்பூம்புகலூர்என்னுந் தலத்தில் 'எண்ணுகேன் என் சொல்லி எண்ணுகேனே" என்ற தேவாரப்பதிகத்தைப் பாடிக்கொண்டு சிவபெருமான் திருவடியை யடைந்தார்" இவ்வாறு சென்ற 18-4-74 வியாழக்கிழமையன்று சைவ பரிபாலனசபை யாதரவில் சபை நாவலர் ஆச்சிரமமண்டபத்தில் நிகழ்ந்த குருபூசையில் சைவப் பெரியார் திரு. சி. தம்பியையா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

கூட்டத்துக்குத் தலைமை வகித்த ஸ்ரீமத். ம. சுப்பிரமணியக் குருக்கள் அவர்கள் "அடியார் வழிபாடு மிகவும் முக்கியமானது; அத்தகைய வழிபாட்டினுற்ருன் நிஷ்களமாக இருக்கின்ற இறைவனை சகள வடிவில் நாம் கண்டு அவனுடைய அருளைப்பெறலாம். இக்காலம் நம் மக்கள் அநுபவிக்கும் துன்பங்கள் நீங்க நாமெல்லோரும் ஆசாரசீலராய் அப்பர் சுவாமிகளுடைய அத்தியற்புத தேவாரங்களை ஓதுதல் வேண்டும். மனம் கசியும், என்பு நெக்குருகும். இம்மைச் செல்வத்தையும் மறுமைச் செல்வத்தையும்நாமடையலாம்" என கூறினர்.

பின்பு அன்னம் பாலிப்பு நிகழ்ந்தது. ஷை குருக்கள் அவர்கள் சிவபூஜா மண்டபத்தில் சிவபூசை புரிந்து குருபூசையையாரம்பித்து வைத்தார், சமயப் பிரசார அமைச்சர் யாவருக்கும் நன்றி கூறினர். ஷை குருபூசை சைவ பரிபாலனசபைக் கார்த்திகை நட்சத்திர மட தருமத்தின் பேரால் நடைபெற்றது.

## மலையகத்தில் ஒரு

1-ஆம் பக்கதகின் வளர்ச்சி

கஷ்டம். அதிலும் மிகக்கஷ்டமானது ஆசியாகளைத் தேடிக் கொள்வதாகும். சேவை உணர்வோடு சமபளத்தை அதிகம் எதிர்பாராது முதன்முதல் ஆசிரியராக நியமிககப்பட்டவர் திரு. ஆழ்வாப்பிள்ளை ஆவர், (வரும)

# சிவ தொண்டையே பெரிதாக மதித்துவாழ்ந்த உத்தமர்

## சிவயோக சுவாமிகளின் அணுக்கத் தொண்டன்

வித்துவான் க. கி நடராஜன் B. O. L. Dq. Ed.
அவர்கள் எழுதிய வாழ்க்கை வரலாறு சுருக்கம்



அமரர் அ. தில்லையம்பலம் J.P.

சங்கரத்தையூர் ஒரு தவஞ் செய்த ஊராகும அங்கு 1897ம ஆண்டு செப்ரெம்பர்மாசம் 24உ திரு. அ தில்லையம்பலம் அவர்கள் மகவாய் உதித்தார்கள் திரு. தில்லையம்பலம் அவர்கள் முயற்சி திருவினையாக்கும் என்னும் முதுமொழிக்கிணங்க மிக்க இளம் பிராயத்திலேயே முயற்சியின் மேன்மையை முழுதும் உணர்ந்தோராய் வாழ்க்கையை ஆரம்பித்தார். தமது 17-வது வயசிலேயே அஃதாவது 1915-ம் ஆண்டிலேயே இரத்தினபுரிப் பகிரங்கப பகுதிக் காரியாலயத்தில் நல்ல சமபளத்தோடு உத்தியோகம் பெற்றுர் 1923 ம் ஆண்டு நகர ஓவசியராக (Town Overseer) நியமனம் பெற்றுர் அப்போது இவருக்கு வயது 24.

### சிவ தொண்டு

செல்வராகி விடுவதால் மட்டும் ஒருவர் பெரியவராகிவிட முடியாது திரு. தில்லையம்பலம் அவர்களது பெருமை அவர்களது சிவபக்தி, சிவத்தொண்டு, தரும சிந்தை, பெரியோரைத் துணைக்கோடல் தயாளகுணம் முதலிய வற்ருல் சிறந்தது "அரியவற்றுளெல்லாம் அரிதே பெரியோரைப் பேணித் தமராக் கொளல்" என்ருங்கு பெரியோரைத் துணைக் கொள்ளும் பெரிய அறிவு படைத்தவராய் 1925ம் ஆண்டு தொடக்கம் ஈழத்துச் சிவஞானச் செல்வராகிய எங்கள் குருபரன் ஸ்ரீமத் சிவயோக சுவாமிகளது அருளுக்குப் பாத்திரமானுர்.

இவர் சைவபரிபலானசபையினது நிருவாகசபை அங்கத்தவராகவும கடமையாற்றிச் சபையினது தொண்டுகளுக்கும் நிதியுதவி புரிந்தனா

எல்லாவகையிலும் செல்வராக வாழ்ந்த இப்பெரியார் 1974-ம் ஆண்டு மார்ச்மாதம் 23 ம் திகதியன்று இவவுலக வாழ்வை நீத்து இறைவன பாத நிழலையடைந்தார் இவர்களது பிரிவு எல்லோருக்கும் பெருந்துன்டம் விளைத்தது. இவரது இடத்தை நிரபப யாருளர்........?

## உடுவிலில் திருமுறைப் பெருவிழா

2-ஆம் பக்கததின் வளர்சசி

29-4-74 4-ம் திருமுறை திரு. நா. செல்லப்பா சித்திரச் சுடர் ஒளி ஆசிரியர் (இளை பாறிய சுகாதாரப் பரிசோதகர்)
30 4-74 5-ம் திருமுறை திரு, த. சிவலிங்கம் J P. (சைவ அநுட்டான சபைத் தலைவர்)
1-5-74 6ம் திருமுறை வேதாகம பூஷணம பிரம்மஸ்ரீ கு. பாலசுந்தரக்குருக்கள் (வேதாகம சைவசித் சபைத்தலைவர்)
2-5-74 7ம் திருமுறை சைவப்புலவர், பண்டிதர் வித்துவான் இ. திருநாவுக்கரசு (விரிவுரையாளர் பரமேஸ்வரக் கல்லூரி)
3-5-74 8ம் திருமுறை திருவாசகமணி திரு, மாணிக்கவாசகர் (மணிவாசகர் சபைத் தலைவர்)
4-5-74 9ம் திருமுறை திரு. சி கனகநாயகம் (தருகுல ஆசிரியர்)
5-5-74 10 ம் திருமுறை பண்டிதர் மு. கந்தையா B, A. (சைவ சமய உயர்பீடச் செயலாளர்)
6-5-74 11-ஆம் திருமுறை சித்தாந்த ஞானபானு மு. ஞானப்பிரகாசம் B A; B. Sc
12-ம் திருமுறை சைவப்புலவர் வித்துவான். வ. செல்லையா (அ. இ, சைவப் புலவர் சங்க முன்னுள் செயலாளர்)
சைவப் புலவர் மூ. திருஞான சம்பந்த பிள்ளை (அ- இ. சைவப் புலவர் சங்கச் செயலாளர்)
நன்றியுரை; பிரம்ம ஸ்ரீ கா. சாமபசதாசிவக்குருக்கள் அவர்கள்

தினமும் பகல் திருவிழா முடிந்தவுடன் 3 மணி முதல 5 மணி வரை சமய சம்பந்தமான கருத்தரங்கு கலந்துரையாடல் ஆதீன சார்பில் நடைபெறும. விசேடமாக சமய அடிப்படையிலான கோவில் அமைப்பு, மூர்த்தி அமைப்பு யாகசாலை அமைப்பு, மந்திர யந்திர அமைப்பு, கும்ப விம்ப தம்ப அமைப்பு போன்றவற்றின் விரிவான விளக்கங்கள் தம்பிரான் சுவாமிகளால் தரப்படும்.

அத்தருணம் அன்பர்கள் அடியார்கள், சைவ அபிமானிகள் வந்து விழாவில் கலந்து பெரியோர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டு அம்பாளின் திருவிழாக் காட்சிகளைக் கண்டு அம்பாளின் திருவருள் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகிறோம். சுபம்.

மெய்கண்டார் ஆதீன சமயப் பிரசார சபை.
மீனுக்ஷி சுந்தரேஸ்வரர் தேவஸ்தானம்,
உடுவில், 24-4-1974.

## திருவாமூரில் அப்பர் சுவாமிகள் குருபூசை விழா

அப்பர் பெருமான் என வழங்கும் திருநாவுக்கரசரின் அவதாரஸ்தலமான திருவாமூரில் அப்பர் பெருமான் திருக்கோயிலில சித்திரை நட்சத்திர குருபூசை விழா சித்திரை 3, 4, 5 மூன்று நாட்களிலும திருதருமை ஆதீன அருளாட்சியிலுள்ள சச்சிதானந்தம பிள்ளை சதாபிஷேக நினைவு அப்பர் குருகுலத்தின சார்பாக வழக்கம போல சிறப்பாக நடைபெற்றது.

விழா 3 நாளும் காலையில் ஸ்ரீ மாதினிடார் சிவபூஜை நிலையத்தில் சிவபூஜை துரந்தரர்கள் பல பகுதிகளிலிருந்தும் வந்து கூடி சிவபூஜைகள் செய்தார்கள் முதல் நாள் காலை வடலூர்தவத் திரு ஊரன அடிகள தலைமையில் சிவபூசை மகாநாடு நடைபெற்றது.

சென்னை நகரிலுள்ள ஆதீனத்தின் சமயபிரசார நிலையத்தின் தலைவர் தவத்திரு மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அனைவரையும் வரவேற்றுர்

வான்முகில் வழாதுபெய்க; மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி, 450ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச அச்சியந்திரசாலையில், 26—4—1974 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
பிரதம ஆசிரியர்: திரு. தம. சிவப்பிரகாசம்
ஆசிரியர்: திரு. மூ. மயில்வாகனம்

## ஸ்ரீமத் சுவாமி சிதானந்த சரஸ்வதி மகராஜ்

ஸ்ரீமத் சுவாமி சிதானந்த சரஸவதி மகராஜ் அவர்களின் வருகையை முன்னிட்டு 28-4-74 ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம், நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் விசேஷ கூட்டம் நிகழும். தலைவர் திரு சி. கனகரத்தினம் அவர்களுடைய தலைமையுரையை அடுதது வரவேற்புரை, பாராட்டுரைகள், சுவாமிகளின் உபந்நியாசமும் நிகழவிருக்கின்றன.

## சாந்தையர் மடம் ஸ்ரீகற்பகவிநாயகர் கோவில்

18-4-74 ல் அன்று மாலை 6 மணிக்கு குருபூசை ஆரம்பமானது நமசிவாயப் பதிகம் கந்தபுராணபாராயணம் என்பன நடைபெற்றபின் சைவப்புலவர் வ. கந்தசுவாமி நாயனருடைய பெருமையைப் பற்றி உரை நிகழ்த்தினர் 'சைவசமயம்" என்னும் பத்திரிகையும் வெளியிடப்பட்டது மாணவர்களின் உபந்நியசங்களும் இடம் பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org